[1989 மே 2

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இதற்கு மேலே அந்த உச்ச வரம்பை உயர்த்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகப்பேறு இல்லங்களுக்கு செவிலியர்கள் நியமித்தல்

183—(*வினா எண். 113)—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் உள்ள மகப்பேறு இல்லங்களுக்கு செவிலியர்கள் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, தற்பொழுது 8,558 கிளை சுகாதார நிலையங்கள் (மகப்பேறு இல்லங்கள்) தமிழ் நாட்டில் செயல் பட்டு வருகின்றன. எல்லா கிளை சுகாதார நிலையங்களிலும் மகப்பேறு உதவியாளர் (செவிலியர்கள்) ஒருவர் நியமிக்கப்பட் டுள்ளார்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய செங்கற்பட்டு தொகுதியில் பாண்டூர், அஞ்சூர், மழுவதூர் போன்ற பகுதிகளில் மகப்பேறு இல்லங்கள் நிறுவப்பட்டு கடந்த 4, 5 ஆண்டுகளாக அவை திறக்கப்படாமலே இருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா செவிலியர் நியமனத்தை குறித்தது. இருந்தாலும் அங்கே மருத்துவ மனைகள் திறக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார் கள். நான் முன்பே இந்த மன்றத்திலே பதில் அளித்திருக்கிறேன். பல இடங்களில் இதுபோன்ற மருத்துவமனைகள் திறக்கப்படா மல் இருப்பதாக குறிப்புகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அவை களைத் திறப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும், எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வீ. தமிழ்மணி : துணைக் கேள்வி செவிலியர் தொடர்பாக வரவேண்டும்.

திரு. வீ. தமிழ்மணி : தலைவர் அவர்களே, கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பாக ஐ.என்.பி திட்டத்தின் மூலமாக இந்த மகப்பேறு இல்லங்கள் கட்டப்பட்டு 5, 6 ஆண்டுகளாக அவை திறக்கப்படாமல் இருக்கின்றன. அதற்கு செவிலியர்கள் இதுவரை யில் நியமிக்கவில்லை. என்பதையாவது அரசு அறியுமா? அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதைஅறிய விரும்புகிறேன்.

1989 மே 2]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, திறக்கப்படுகின்றபோது செவிலியர்கள் நியமிக்கப்பட்டு, அது நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் மகப்பேறு இல்லங்கள் இருக்கின்றன. செவிலியர் இருப்பது இல்லை. இரவு நேரத்தில் அவசரமாக வருகின்றபோது பல இடங்களில் இருப்பது இல்லை. பொதுவாக கிராமப்புறங் களில் குழந்தை இறப்பு அதிகமாக இருப்பதாகச் சொல்லப் படுவதால், இந்த முறையில் செவிலியர்கள் இருப்பதற்கும் ஒரு அவசரமான கேஸ் என்று சொன்னால் பெரிய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஏதாவது ஒரு வாகன ஏற்பாடும் மைய மான ஒரு இடத்தில் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்கள் இருப்பது இல்லை என்று சொல்கின்றபோது நியமிக்கப்பட்ட செவிலியர்கள் பணிக்கு வருவதில்லை என்ற புகார் சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். அவ்வாறு செவிலியர்கள் மருத்துவ மனை களில் இல்லை என்று சொல்லி தனிப்பட்ட இடங்களிலிருந்து புகார்கள் வரும் என்று சொன்னால் இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்

திரு. எம். சீரங்கன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மகப்பேறு இல்லங்கள் இருக்கும்படியான பல இடங் களில் அது முறையாக இயங்குவதற்கு பாதுகாப்பான வசதிகளும் தண்ணீர் போன்ற வசதிகள் கூட இல்லாமல் பாதுக்காப்பற்ற நிலையில் இருக்கிறது. அதை அரசு அறியுமா ? அதற்கு விரைவில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சில இடங்களில் இதுபற்றிய பிரச்சினைகள் எழுப்பப்பட்டு அவைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

பத்மநாபபுரம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

*184—(*வினா எண். 420)* **திரு. செ. நூர்முகமது :** மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் நகராட்சிக்கென குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயற்படுத்தப் படும் ?